**பேராதனை பல்கலைக்கழகம் - 2022**

-------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களை தவிர பல்கலைக்கழகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது
. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடுதொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது

.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க, பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட, விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாததன் காரணமாக முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட கிரயம் ரூபா 1,871,888,168 ஆன நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு தவறை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை 2023 ஆண்டில் மீள்மதிப்பீடு செய்த பின்னர் நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுப்பதாக. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் பல்கலைக்கழக வளவில் நிர்மாணித்துள்ள பாதைத் தொகுதி, மலசலத் தொகுதி, நீர் குழாய் மற்றும் தொலைத் தொடர்பு தொகுதிகளை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக வளவில் நிர்மாணித்துள்ள நீர் குழாய் தொகுதி மற்றும மலசல தொகுதியை இனங்காணல் கடினமான செயலாவதுடன் தற்போது நிர்மாணிக்கப்படுகின்ற நீர் குழாய் தொகுதி | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் மலசல தொகுதியை இனங்காண்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 99 (ஈ) பிரிவு பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய மிருக மருத்துவ மீடத்தில் மற்றும் விவசாய விஞ்ஞான பீடத்தில் பண்ணைகளிலிருந்து கிடைத்திருந்த ரூபா 48,465,125 ஆன விற்பனை வருமானம் மற்றும் அதற்காக செலவிட்ட ரூபா 58,617,005 தொகை பல்கலைக்கழக வருமானம் மற்றும் செலவாக இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பண்ணைக்களுக்காக கிடைத்த வருமானத்தை மற்றும் மேற்கொண்ட செலவுகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பல்கலைக்கழக சட்ட நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதி திகதியளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,793,659,427 ஆன 14 மூலதன மற்றும் புனரமைப்பு கருத்திட்டங்கள் ஆதன பொறி மற்றும் உபகரத்தின் கீழ் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த 14 மூலதன மற்றும் புனரமைப்பு கருத்திட்டங்கள் மீளாய்வாண்டினுள் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக நிதிப் பிரிவிற்று அறிக்கை கிடைக்கவில்லையென. | முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள், ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழத்தில் மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் 22 வெளிநாட்டு மாணவர்களிடம் இருந்து மீளாய்வாண்டிற்கு உரியதாக அறவிட வேண்டிய ரூபா 61,825,532 ஆன (USD 169,500) பாடநெறி கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டு நிதிக்கூற்றுக்களில் இதனை சரிசெய்து வருமானமாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய அனைத்து வருமானங்களையும் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | 2016 மார்ச் 01 இன் 04/2016 இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் 5.2.1 மற்றும் 5.2.2 ஆகிய பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டினுள் | சுய நிதியீட்டல் செயற்பாடுகளிற்குரிய அபிவிருத்தி செலவின விடயங்களிற்கு செலவு வைக்க வேண்டிய நிதியை வருமானமாக | கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | செயற்படுத்திய சுய நிதியீட்டல் செயற்பாடுகளினால் பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 66,579,267 இனை இனங்கண்டு பல்கலைக்கழக வருமானமாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | இனங்காணாததுடன் 2023 ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய வருமானமாக கணக்குகளில் செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான கெட்டம்பே பிரதேசத்தில் அமைந்துள்ள 40 பர்சஸ் அளவான காணியொன்று 1987 திசெம்பர் 31 திகதி முதல் 2017 திசெம்பர் 30 திகதி வரை 30 ஆண்டு காலத்திற்கு குத்தகை அடிப்படையில் திவிநெகும திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2017 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய ரூபா 7,200,000 ஆன நிலுவை குத்தகை தொகை மற்றும் 2018 ஆண்டு முதல் 2022 ஆணடு வரையான 05 ஆண்டு காலத்திற்குரியதாக கிடைக்க வேண்டிய குத்தகை தொகையை கணக்கிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | மதிப்பீட்டு அறிக்கையொன்றை பெற்ற பின்னர் அறவிட வேண்டிய குத்தகை தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | வருமானத்தை கணக்கீடு செய்ய வேண்டியதுடன் நிலுவையாகவுள்ள குத்தகை தொகையை அறவிட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக செலுத்திய ரூபா 98,104,100 ஆன மாணவர் மஹபொல உதவியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | இந்த மஹபொல மாணவர் உதவித் தொகையை நிதிக்கூற்றுக்களில் மாணவர் மஹபொல உதவி பெறுவனவு மற்றும் கொடுப்பனவின் கீழ் எதிர்வரும் ஆண்டில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஆண்டிற்குரிய வருமானம், செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | 2022 மே 05 இன் 09/2022 இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 மே 10 திகதி முதல் கணனி மென்பொருட்கள் 20 சதவீதம் பெறுமானத் தேய்வு விகிதத்தின் கீழ் காலக்கழிவு செய்ய வேண்டிய போதும், 10 சதவீத பெறுமானத் தேய்வு விகிதத்தின் கீழ் காலக்கழிவு செய்த காரணத்தால் மீளாய்வாண்டிற்குரிய கற்புலனாகாத சொத்து ரூபா 2,081,956 குறைத்து பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்தது. அதன் | சரியான காலக்கழிவு அளவை 2023 ஆண்டில் நிதிக்கூற்றக்களில் செம்மையாக்க நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஆலோசனைகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பிரகாரம் பற்றாக்குறை மற்றும் கற்புலனாக சொத்து பெறுமதி அவ்வளவால் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.6 பெற வெண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 திகதியளவில் ஓய்வுபெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாறிச் சென்ற 14 அலுவலர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,372,636 ஆன கடன் மீதியை 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட இயலாதிருந்தது. | அவ் அலுவலர்களின் ஊழியர் சேம நிதியை விடுவிக்கும் போது இக் கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை கடன் மீதியை அறவிட வேண்டும். |
| (ஆ) | பல்கலைக்கழக சொத்துக்களை பயன்படுத்துவதற்காக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வெளித்தரப்பினர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 6,879,318 தொகையை மூன்று ஆண்டுகளிற்கு அதிக காலம் கடந்திருந்த போதும், அறவிட இயலாதிருந்தது. | வெளித்தரப்பினரிடமிருந்து அறவிட வேண்டிய இத்தொகையை அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக. | கிடைக்க வேண்டிய அனைத்து கட்டணங்களையும் அறவிட வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக 09 பீடங்களில் இருந்து 1980 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலத்திற்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 1,419,396 ஆன மண்டப கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை 04 ஆண்டுகள் முதல் 42 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதும், அறவிட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மண்டப கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை எதிர்வரும் ஆண்டில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | கிடைக்க வேண்டிய கட்டணம் மற்றும் தண்டப்பணத்தை அறவிட வேண்டும். |

**1.7 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டம் | | | |
| | (i) 45(XV) பிரிவு மற்றும் 34(3) பிரிவு | கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் பல்கலைக்கழகத்திற்கான உடன்படிக்கைகளுக்கு உட்பட உபவேந்தருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதும், மீளாய்வாண்டினுள் எவ்வித உடன்படிக்கைக்கும் உட்படாது ரூபா 7,525,000 ஆன 02 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன. | சேவைபெறுனர் உடன்படிக்கை கைச்சாத்திட வேண்டியது சுற்றாடல் கற்கை மத்திய நிலையமென, சேவைபெறுனர் நிறுவனத்திற்கு தொடர்பாடல் காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளதாக மற்றும் எதிர்காலத்தில் இதனை சீராக்க நடவடிக்கை எடுப்பதாக. | பல்கலைக்கழக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) 99(ஈ) பிரிவு | மீளாய்வாண்டில் பலதரப்பட்ட 56 நிதியங்களிற்கு கிடைத்திருந்த ரூபா 184,707,847 தொகை, கால்நடை விஞ்ஞான மற்றும் விவசாய விஞ்ஞான பண்ணை கருத்திட்டங்களிலிருந்து 2019 – 2021 கால எல்லையினுள் முறையே கிடைத்திருந்த ரூபா 55,573,606 தொகை மற்றும் ரூபா 46,398,334 தொகை ஆக கூட்டுத் தொகை ரூபா 286,679,787 தொகையை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்காது பல நிதியக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்நிதியங்களிற்கான பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, நிதிய வருமானம் மற்றும் செலவாக கணக்கீடு செய்த போதும் திறைசேரியினால் வழங்கப்படும் ஏற்பாட்டை கணக்கீடு செய்வதனை சரியான முறைமையின் பிரகாரம் கணக்கீடு செய்துள்ளதாக. | பல்கலைக்கழக சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) பல்கழைக்கழக தாபன வதிக்கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 பந்தி மற்றும் 2017 ஜுலை 10 திகதிய 10/2017 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | வரவு மற்றும் வெளிச் செல்லலை விரல் அடையாள இயந்திரம் மூலம் உறுதி செய்து கொள்ளாது கல்விசார் மற்றும் கல்விசார் உதவி பதவியணியின் 963 அலுவலர்களுக்கு 2021/2022 ஆண்டுகளில் கூட்டுத் தொகை ரூபா 6,362,499,051 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | பொது முயற்சிகள் மீதான செயற்குழு கூட்டம் வழங்கும் பரிந்துரைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுக்கு சமர்பித்து திட்டவட்டமான செயல் முறையொன்றை நடைமுறைப்படுத்த எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் பொது முயற்ச்சிகள் தொடர்பான செயற்குழு பரிந்துரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) XXVII ஆம் அத்தியாயத்தின் 1.2.1 பந்தி | பொறியியல் பீட சிரேஷ்ட உதவி பதிவாளரின் எழுத்துமூல அங்கீகாமின்றி பீடத்தின் வாகன பொறுப்பு அலுவலரினால் மீளாய்வாண்டு ஜுன் 11 திகதி சாரதி மற்றும் சாரதி உதவியாளருடன் வாகனமொன்றை வாரஇறுதி நாள் ஒன்றில் கடமையில் ஈடுபடுத்தி அவ்வாகனம் உள்ளடங்களாக இன்னும் 04 வாகனங்களை விபத்திற்கு உள்ளாக்கி ரூபா 5,443,615 அளவான நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. | அவ்வாகன விபத்து தொடர்பாக ஆரம்ப விசாரணையை முடிவுறுத்தி முறையான விசாரணையொன்றிற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதாக. | வாகனங்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாடடை வழுவூட்ட வேண்டியதுடன் விசாரணை நடவடிக்கைகளை விரைவில் முடிவுறுத்தி பொறுப்புவாய்ந்த அலுவலருக்கு எதிராக நடுவடிக்கைளை எடுக்க வேண்டும். |

(இ) அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) 2.8.1 (b), 7.2.1 மற்றும் 7.6.1 (a) வழிகாட்டி | 2022 ஆண்டில் பட்டதாரி பட்டமளிப்பு வைபவத்திற்குரிய புகைப்படம் எடுக்கும் பெறுகைகள் நடைமுறையின் போது வழிகாட்டிகளிற்கு இணங்காது நிபுணத்துவ | பல்கலைக்கழக மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உரியவாறு சேவைகளை வழங்கும் நோக்கில் நாட்டில் நிலவிய பொருளாதார | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழகாட்டிகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறிவுடைய ஒருவரை தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு நியமிக்காது கூடுதல் தகைமை பெற்ற ஒப்பந்ததாரரை தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பலவந்தம் செலுத்தியதாக குறிப்பிட்டு பெறுகைகள் செயன் முறையிலிருந்து அகற்றி வெளிப்படைத்தன்மை மற்றும் இரகசியமின்றி தெரிவு செய்யப்பட்ட வேறு இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு டென்டரை வழங்கி ரூபா 3,458,980 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பிரச்சினை காரணமாக எழுந்த அனைத்து விடயங்களையும் கவனத்திற் கொண்டு குறைந்தபட்ச விலைகளின் கீழ் பெறுகை செய்யப்பட்டுள்ளதா க. | |
| (ii) 2.14.1 வழிகாட்டி | பகடிவதை தொடர்பாக மாணவர்களிற்கிடையில் எழுந்த சர்ச்சை காரணமாக கலைப் பீடத்தின் சிற்றிண்டிச்சாலை மற்றும் அதனை சுற்றி சீசீடீவீ (CCTV) கெமரா தொகுதியொன்றை பொருத்த பெறுகைகள் நடைறைக்கு மாற்றமாக செயற்பட்டு அதற்காக ரூபா 1,122,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.14.1 பிரகாரம் மிகவும் அவசர நடவடிக்கையின் போது உரிய டென்டர் நடைமுறையிற்கு மாற்றமாக செயற்பட முடியுமென அறிவித்துள்ளதால் மாணவர்களின் உயிர் அபத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் இந்த சீசீடீவீ பொருத்தப்பட்டதாக. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழகாட்டிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 7.9 வழிகாட்டி | மீளாய்வாண்டிற்காக மிருக உணவு கொள்வனவு செய்கையில் அம்மிருக உணவுகளின் போசாக்கு பதார்த்தங்களின் உள்ளடக்கம் தொடர்பாக விரிவாக விலைமனு மதிப்பீட்டிற்கு உட்படுத்தாது தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை மீது மிருக உணவுகளை கொள்வனவு செய்ய | மிருக உணவு மீதான அனுமதிப்பத்திரம் உள்ள வழங்குனர்களிடம் இருந்து மாத்திரம் கொள்வனவு செய்யப்படுவதுடன் தொழிநுட்பக் குழு விலைமனு மதிப்பிடும் போது இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்துவதாக | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழகாட்டிகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இரண்டு வழங்குனர்களுக்கு ரூபா 15,568,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் உணவு மாதிரிகளை பரிசோதிப்பது நடைமுறையில் கடினமாவதாக. | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.5 மற்றும் 13.7 பந்தியும், பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் III ஆம் அத்தியாயத்தின் 23.3.7 பந்தி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 09/2015 மற்றும் 06/2014 கொண்ட சுற்றறிக்கை | பல்கலைக்கழக பதிவாளர் பதவியில் கடமை மேவுகை அடிப்படையில் நியமிக்கப்பட்ட பிரதி பதிவாளரிற்கு தாபன விதிக் கோவை ஏற்பாடுகளிற்கு மாற்றமாக செயற்பட்டு 2021 சனவரி முதல் 2023 பெப்ரவரி வரை எரிபொருள் மற்றும் போக்குவரத்துப் படிகளாக ரூபா 1,364,670 தொகையும், உபசார படிகள் (Entertainment Allowances) ஆக ரூபா 270,400 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. | பதிவாளர் பதவியில் கடமை மேவுகை செய்யும் போது பெண்ணொருவர் என்ற வகையில் கடமையில் ஈடுபடும் போது அவரிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவது அத்தியவசியமாகை யால் பல்கலைக்கழகத்தி னூடாக கடமை வாகனமொன்றை வழங்கும் போது மேற்கொள்ள வேண்டிய கிரயத்தை கருத்திற் கொண்டு போக்குவரத்து படிகளை வழங்குவது மிகவும் நன்மையாவது மற்றும் கடமை தேவைப்பாட்டின் மீது உபசரிப்பு படிகள் செலுத்தியுள்ளதாக. | தாபன விதிக் கோவை மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நிதி அமைச்சரின் மற்றும் உரிய விடயப் பொறுப்பு அமைச்சரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி மிருக வைத்திய பீட பண்ணை கருத்திட்டத்தினூடாக கிடைத்திருந்த ரூபா 14,097,000 தொகையை மீளாய்வாண்டு இறுதியில் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆண்டில் ஆரம்பித்த மற்றும் புதுப்பித்த நிலையான வைப்பிற்காக நிதி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு அனுப்பியுள்ளதாக. | நிதிச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | 1989 ஜுலை 24 திகதிய இலக்கம் 09/1989 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் | ஏதேனும் அலுவலர் ஒருவரை கடமையில் நிரந்தரமாக்க கல்வி அல்லது ஏனைய சான்றிதழ்களை உறுதிப்படுத்திக் | ஊழியர் ஒருவருக்கு செலுத்திய சம்பளத்தை அறவிடுவது தொடர்பாக கட்டுப்பாட்டு | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | தாபன சுற்றறிக்கை மூலம் அங்கீகரித்திருந்த இலக்கம் 24/89 மற்றும் 1989 மார்ச் 31 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.7 பந்தி | கொள்ள தேவையான போது, அவரின் தகுதிதிகான் காலம் முடிவடையும் வரை இருக்காது நியமித்த பின்னர் முடியுமான வரை விரைவில் அந்நடவடிக்கையை முடிவுறுத்த வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும், போலியான சான்றிதழ்களை முன்வைத்த கல்விசாரா ஆளணியின் ஊழயர்கள் இருவரின் தகைமையை 06 மாத கால எல்லையினுள் உறுதி செய்துகொள்ளாது அந்த 06 மாதங்களையும் விஞ்சி 04 ஆண்டுகள் வரை கூட்டுத் தொகை ரூபா 4,904,233 ஆன சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சபைக்கு சமர்பித்துள்ளதுடன் அடுத்தவரின் பெருபேறு இதுவரை உறுதி செய்து கிடைக்கவில்லை என. | |
| (எ) | 2014 பெப்ரவரி 11 திகதிய இலக்கம் 02/2014 கொண்ட முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவின் அங்கீகாரமின்றி தகவல் மற்றும் எவ்வித இடைக்கால ஆராய்ச்சி அறிக்கையை அல்லது இறுதி ஆராய்ச்சி அறிக்கையை பெற்றுக் கொள்ளாது கல்விசாரா 59 ஆளணியினரிற்கு 2014 நவம்பர் 01 திகதி முதல் 2022 ஆகஸ்ட் 31 திகதி வரையான காலத்தினுள் ரூபா 83,739,907 ஆன ஆராய்ச்சி படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | தற்போது ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் மீது ஆராய்ச்சி படிகள் செலுத்தப்படுவதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஏ) | 2016 மார்ச் 01 திகதிய இலக்கம் 04/2016 கொண்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | | | |
| | (i) 4.5 பந்தி | பல்கலைக்கழகத்தில் 2018 சனவரி 01 திகதி முதல் 2021 திசெம்பர் | சுய நிதியீட்டல் செயற்பாடுகளின் நடவடிக்கைகள் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு |

| | | | |
|---|---|---|---|
| | 31 வரையான காலத்தினுள் செயற்படுத்தியிருந்த பாதீட்டு பெறுமதி ரூபா 354,379,267 ஆன 225 சுய நிதியீட்டல் செயற்பாடுகள் மற்றும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாத 142 சுய நிதியீட்டல் செயற்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச கால எல்லையை கடந்திருந்த போதும் அதற்காக தயாரிக்க வேண்டிய வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரித்திருக்கவில்லை. | பூர்த்தியான பின்னர் வருடாந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கவுள்ளதாக. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) 5.1.4 பந்தி | 2018 சனவரி 01 திகதி முதல் 2022 ஜுலை 31 வரையான காலத்தினுள் செயற்படுத்தியிருந்த சுய நிதியீட்டல் செயற்பாடுகளிற்காக ரூபா 21,794,855 தொகை பல்கலைக்கழக அபிவிருத்தி செலவின தலைப்பிற்கு செலவு வைக்காது பீட மற்றும் திணைக்கள நானாவித தேவைகளுக்காக அங்கீகாரமின்றி செலவிடப்பட்டுள்ளது. | 383 மற்றும் 387 ஆவது பல்கலைக்கழக நிதிக் குழு தீர்மானங்கள் மற்றும் சுற்றறிக்கையின் 5.1.6 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகார வரவு செலவு திட்டத்தின் 5.1.4 இன் கீழ் குறிப்பிடப்படும் தொகையை பீடத்தின் தேவைப்பாடுகளிற்காக செலவு செய்துள்ளதாக. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) 5.1.4, 5.2.1 மற்றும் 5.2.2 ஆகிய பந்தி | அபிவிருத்தி செலவின விடயத்திற்காக ஒதுக்கிய பங்களிப்பு தொகையை பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமென குறிப்பிட்டுள்ள போதும், பல்கலைக்கழக 2018 சனவரி 01 திகதி முதல் 2022 ஜுலை 31 வரை செயற்படுத்தியிருந்த 213 சுய நிதியீட்டல் செயற்பாடுகளிற்குரிய ரூபா 196,103,699 ஆன பங்களிப்பு தொகையை | 04/2016 சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் அபிவிருத்தி செலவினத் தலைப்புகளிற்கான பங்களிப்புத் தொகை குறித்த நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவது அச் செயற்பாடுகளை பூர்த்தி செய்து அவற்றின் நிதிக்கூற்றுக்கள் நிதிக் குழுவிற்கு | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டு இறுதி வரையும் பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. | சமர்ப்பித்த பின்னரே என. | |
| (ஐ) | 2023 சனவரி 18 திகதிய இலக்கம் BD/HRD/126/214/ 19/2023 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | மீளாய்வாண்டு இறுதியில் பிணைமுறி மற்றும் உடன்படிக்கையை மீறுபவர்களிடமிருந்து அறவிட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 747,751,824 தொகையை திறைசேரிக்கு மாற்றி இருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்படும் சுற்றறிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இது வரை உள்ளீர்பு செய்து வெளியிடப்படவில்லை என. | திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 77,582,289 ஆன பற்றாக்குறையானதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் மிகை ரூபா 620,220,964 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 697,803,253 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிபிற்கு ஆளணி வேதன செலவினம், வழங்கல் சேவை செலவினம், ஒப்பந்த சேவை செலவினம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினம் அதிகரிப்பு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புனரமைப்பு 08 கருத்திட்டங்களிற்கு உரிய வேலைகளை ஆரம்பிக்க செலுத்தியிருந்த ரூபா 33,827,177 தொகை மற்றும் மூலதன 04 கருத்திட்டங்களிற்கு செலுத்தியிருந்த ரூபா 11,982,808 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் செலுத்தி 02 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் கடந்துள்ள போதும், அம் முற்பணம் மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மொத்த முற்பணத்தையும் அறவிட நடவடிக்கை எடுப்பதாக. | பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் முற்பணத்தை அறவிட வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப புலனாய்வு அறிக்கை பிரகாரம் பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் கீழான தவறொன்றை பார்த்த பார்வையில் செய்திருந்ததால் முன்னால் பதிவாளரின் வேலையை தடை செய்ய முடியுமாக இருந்த போதும் அவ்வாறு செய்யாது கட்டாய வீடுமுறையில் அனுப்பி பின்னர் | செலுத்திய மேலதிக சம்பளத்தை அறவிட தீர்மானித்துள்ள போதும், 2023 மார்ச் 30 திகதி மேல் முறையீட்டு நீதிமன்றில் இணக்கப்பாட்டின் பிரகாரம் செலுத்திய மேலதிக சம்பளத்தை அறவிடுவதனை தற்காலிகமாக | செலுத்திய சம்பளம் தொடர்பாக பொறுப்புவாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை வினவி அதன் பிரகாரம் முறையான பரிசோதனையொன்றை மேற்கொள்ளாது அவரின் சேவையை முடிவுறுத்தல் எனும் கவனயீன மற்றும் தவறான முகாமைத்துவ தீர்மானம் காரணமாக பல்கலைக்கழகத்திற்கு எவ்வித தொடர்ச்சியான சேவையையும் வழங்கியிருக்காத போதும் ரூபா 6,393,354 ஆன சம்பளம் மற்றும் படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | இடைநிறுத்தியுள்ளதாக. | |
| (இ) | பிணைமுறி மற்றும் உடன்படிக்கையை மீறிய 122 விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து 02 ஆண்டு முதல் 52 ஆண்டுகள் வரையான காலத்திற்குரியதாக மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட வேண்டிய ரூபா 240,944,708 யை அந்த விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்களிடமிருந்து அறவிட ஒழுங்கான முறைமையொன்றை பின்பற்றி இருக்கவில்லை. | இந்த அலுவலர்களின் ஊழியர் சேமலாப நிதியங்களின் மீதிகள் மற்றும் பிணைமுறி பெறுமதிகளின் மீதிகளை கணக்கிட்டு குறித்த அறவீடுகளிற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கோரவுள்ளதாக. | அறவிட ஒழுங்கான முறைமையொன்றை பின்பற்ற வேண்டும். |
| (ஈ) | சம்பளமற்ற விடுமுறை பெற்ற மற்றும் கடமையை விட்டுச் சென்றிருந்த தகைமைகாண் காலத்திலுள்ள பிணைமுறியை மீறிய 04 விரிவுரையாளர்களிற்காக ரூபா 2,125,975 சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | சேமலாப நிதியங்களிலிருந்து அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதாக. | அறவிட நடவடிக்கை வேண்டும். |
| (உ) | பல்கலைக்கழக பொறியியல் நிர்மாண மத்திய நிலையத்தினால் மதியுரை சேவைகளை மேற்கொள்ளாது 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை 03 ஒப்பந்தங்களின் மதியுரை சேவைகளை வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்று ரூபா 4,539,029 செலுத்தப்பட்டிருந்தது. | பொறியில் பீடத்தின் பீடாதிபதிக்கு விலைமணு சமர்ப்பிப்பது தொடர்பாக ஆலோசனை வழங்கியுள்ளதாக. | பல்கலைக்கழக பொறியியல் நிர்மாண மத்திய நிலையத்தின் மதியுரை சேவைகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 48 ஆம் உறுப்புரையின் பிரகாரம் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக அதிஉயர் அதிகாரம் தொடர்பான பொறுப்புடைமை கடமைகள் தொடர்பாக செயற்படும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சரியான மற்றும் உரியவாறு அழைக்கப்பட்டிருக்கையில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் | அவ்வலுவளர்களிற்கு விளக்கம் கோரும் கடிதம் விநியோகித்துள்ளதுடன் அந்த விளக்கம் கோரும் கடிதத்திலுள்ள விடயங்களை கவனத்திற் கொண்டு பின்னர் அந்த அலுவலர்கள் தொடர்பாக எடுக்க முடியுமான ஒழக்காற்று நடவடிக்கையை தீர்மானிக்க பல்கலைக்கழக கட்டுப்பாட்டு சபைக்கு சமர்பிக்க நடவடிக்கை | நிதிப் பொறுப்புடைமை கடமைகள் புறக்கணித்தல் தொடர்பாக பொது முயற்சிகள் சபைக் குழு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பல்கலைக்கழகத்தில் நடாத்திய 98, 99 மற்றும் 100 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திற்கு கல்விசாரா ஆளணியினரின் நிறைவேற்று அலுவலர்கள் முறையே 17 பேர்கள், 11 பேர்கள் மற்றும் 13 பேர்கள் பங்குபற்றுவதனை புறக்கணித்திருந்தனர். | எடுப்பதாக. | |
| (எ) | 2003 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை புனரமைப்பு மற்றும் மூலதன கருத்திட்டங்களிற்காக செவிட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 411,628,504 தொகைக்குரிய கருத்திட்ட வேலைகள் பூர்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்த போதும் அதற்கு பொறுப்புவாய்ந்த அலுவலர்களை இனங்கண்டு அத்தொகையை அறவிட அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிக்கவேனும் நடவடிக்கை எடுக்காது தொடர்ந்து பூர்த்தியாகாத வேலைகளின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | பட்டியல்கள் தீர்க்கப்படாமை மற்றும் கருத்திட்டங்களை இடைநடுவே கைவிட்டுள்ளதால் அக்கருத்திட்டங்களை மூலதனமாக்க முடியாதுள்ளதாக. | பொறுப்புவாய்ந்த அலுவலர்களிடம் இருந்து அறவிட அல்லது புத்தகளிலிருந்து பதிவழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 நிதிய குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 40,467,077 ஆன 35 ஆராய்ச்சி நிதியங்களின் 01 ஆராய்ச்சி நிதியத்திற்குரிய ரூபா 14,963,744 தொகை 05 ஆண்டுகளை விஞ்சிய காலமாகவும், 19 ஆராய்ச்சி நிதியத்திற்குரிய ரூபா 14,004,909 தொகை 01 ஆண்டு முதல் 05 ஆண்டுக காலமாகவும், 15 ஆராய்ச்சி நிதியத்திற்குரிய ரூபா 11,498,424 தொகை ஓராண்டு காலமாகவும் குறை பயன்பாட்டுடன் நிலவின. | 2022 ஆண்டில் இந்த நிதியத்தின் கீழ் கொடுப்பனவிற்காக கோரிக்கை செய்யப்படவில்லை என. | நிதியம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 ஒப்பந்த நிருவாகத்தின் குறைபாடகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பீட்டு பெறுமதி ரூபா 85,105,000 ஆன மிருக வைத்திய பீடத்தின் பண்ணை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கட்டித்தை மேம்படுத்தும் வேலை உடன்படிக்கை பிரகாரம் 2019 நவம்பர் 01 திகதியளவில் பூர்த்தி செய்ய வேண்டிய போதும், 2022 | நெருக்கடியான பொருளாதார நிலைமை காரணமாக தாமதமாகியுள்ளதாக மற்றும் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் அங்கிகாரத்தை பெற்றுக் கொண்டு 2022 நவம்பர் 30 வரை ஒப்பந்த காலத்தை நீடித்துள்ளதாக. | விரைவில் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 31 வரை 06 சந்தர்ப்பங்களில் காலம் நீடிப்பை பெற்றுக்கொண்டு மீளாய்வாண்டு இறுதி வரையும் நிர்மாண பணிகள் பூர்த்தி செய்திருக்கவில்லை. | | |
| (ஆ) | பல்கலைக்கழகத்தின் மீவதுர வடுதி வளவில் சிற்றுண்டிச்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 36,815,177 ஆன மதீப்பீட்டு பெறுமதிக்கு 2021 ஒக்தோபர் 01 ஆம் திகதி ஒப்பந்ததார நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருந்ததுடன் 2022 செப்தம்பர் 30 ஆம் திகதியளவில் இந்த வேலையை பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வான்டு இறுதிவரையும் நிர்மாணப் பணிகளின் 19 சதவீதம் மாத்தரம் பூர்த்தி செய்துள்ளதுடன் ரூபா 4,874,908 யினை ஒப்பந்ததாரருக்கு செலுத்தியிருந்த போது ஒப்பந்ததாரரால் ஒருதலைப்பட்சமாக ஒப்பந்த வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. | கருத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான ஆலோசணைகள் ஒப்பந்ததாரருக்கு வழங்கியுள்ளதாக. | கருத்திட்டத்தின் வேலைகள் மீண்டும் ஆரம்பித்து விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும். |
| (இ) | தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரையின்றி மற்றும் சிக்கனம், செயற்திறமை, ஒழுங்குமுறை மற்றும் நேர்மை ஆகிய விடயங்கள் தொடர்பாக உரிய கவனமின்றி பெறியியல் பீடத்தின் பீட மத்திய நிலைய கட்டிடத்தில் அடித்தளத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆண்டின் போது ரூபா 15,995,157 யினை செலவிட்டு 05 வருட காலம் முதல் நிர்மாண பணிகளை கைவிடப்படடிருநத காரணத்தால் அதற்குரிய செவினம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் பரிந்துரை வழங்கியுள்ளதாக மற்றும் இரண்டு கட்டங்களுடன் கூடிய இந்த வேலையின் முதல் கட்டம் மாத்திரம் 2021 ஆகஸ்ட் 02 பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக. | சிக்கனம், செயற்திறமை, ஒழுங்குமுறை மற்றும் நேர்மையுடன் அரச நிதி செலவிடப்பட வெண்டும். |